


தினப்புயல்
PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




# உள்ளூராட்சி சபைத் தேர்தலும் அரசியற் கட்சிகளும்




உள்ளூராட்சிமன்றங்களுக்கான வேட்புமனுக்களை தேர்தல்கள் ஆணைக்குழு கோரியுள்ள சூழலில், வடக்கு கிழக்கில் மாத்திரமல்ல இலங்கை முழுவதும் அரசியற் கட்சிகள் பல கட்டப் பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருகின்றனர். தெற்கில் மொட்டுக் கட்சியும் யானையும் கூட்டணி அமைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கானத் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் ஐக்கிய தேசியக் கட்சி இன்று நாட்டில் பிளவுபட்டு பலமிழந்து போயுள்ள சூழலில், பாராளுமன்றில் மொட்டுக் கட்சியின் பெரும்பான்மைப் பலத்தை நம்பியே தான், ஜனாதிபதியாக பதவியில் இருக்கின்ற நிலையில், பல விமர்சனங்களுடன் இதுவரை காலமும் இருந்து வந்த மஹிந்த மற்றும் ரணில் தரப்பு ஒன்றிணைந்துள்ளது.

சஜித் தலைமையிலான அணியினர் தனித்து இத் தேர்தலை எதிர்கொள்வதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். வடக்கிலும் இவர்களின் அரசியல் வேலைத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளதைக் காண முடிகிறது.

முன்னாள்ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன, டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ச உட்பட்ட 10 அரசியற் கட்சிகள் ஒன்றாக இணைந்து கூட்டணி அமைத்து இத்தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகியுள்ள சூழலில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பும் நேற்றைய தினம் வெளியாகி நாடு முழுவதும் பரபரப்பை அரசியல் மட்டத்தில் ஏற்படுத்தியுள்ளது. மைத்திரிபால சிறிசேன அவர்கள் நஷ்ட ஈடாக 100 மில்லியன் ரூபாய் செலுத்தவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. இவ்விடயம் இக்கூட்டணிக்கு மக்கள் மத்தியில் சரிவினை ஏற்படுத்தவும் கூடும்.

மறுபக்கத்தில் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் மற்றும் ஹிஸ்புல்லா போன்றோர் மீண்டும் மறுபடியும் கூட்டுச்சேர்ந்துள்ளனர். இதற்கான பேச்சுக்கள் நடைபெற்று முடிந்துள்ளதாக அறிகிறோம். கூட்டணிகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது மீண்டும் கட்சியில் ஹிஸ்புல்லா இணைந்துள்ளார். முஸ்லீம் மக்களுக்காக இந்த இணைவு என்கிறார். கிழக்கில் முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் உள்ள சபைகளை ஒட்டுமொத்தமாக கைப்பற்றுவதே இவர்களின் இணைவின் நோக்கம் எனவும் தெரிவித்துள்ளார். இவர்களுடன் முஸ்லீம் காங்கிரசில் இருந்து வெளியேறிய பலரும் இணைய வாய்ப்புக்கள் இருப்பதாகவும் தெரிகிறது. அரசியல் மேடைகளில் ஹிஸ்புல்லா மற்றும் ரவூப் ஹக்கீம் இருவரும்மாறி மாறி கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வந்தாலும் இன்றைய இக்கூட்டு கிழக்கில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தக்கூடும்.

வடக்கு கிழக்கில் உள்ள தமிழ்க் கட்சிகள் பல கட்டப்பேச்சுக்களை நடாத்தி வருகின்றனர். கருத்து மோதல்கள் தொடர்கின்றன. கூட்டணிகள் அமைப்பது பற்றி தீவிரமாகக் கலந்தாலோசித்து வருகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள தமிழரசுக் கட்சி இத் தேர்தலை தனித்து எதிர்கொள்ளவிருப்பதாக அறிய முடிகிறது. ஏற்கனவே தமிழரசுக் கட்சியுடனான மோதல் ஏனைய பங்காளிக் கட்சிகளான ரெலோ மற்றும் புளொட் கட்சிகளுக்குள் தொடர்கிறது. இவர்கள் இத்தேர்தலில் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் கூட்டணி அமைப்பது பற்றி தீவிரமாகக் கலந்தாலோசித்து வருகின்றனர். இன்றும் பேச்சுக்கள் இருப்பதாக அறிகிறோம்.

தமிழ் மக்கள் வடக்கு கிழக்கில் தமிழ்க் கட்சிகள் ஒன்றாகப் பயணிக்கவேண்டும் அதுவே எமது பிரச்சினைகளைத் தீர்க்க ஒன்றாகக் குரல்கொடுக்க தேவையானது. எமது பலமே ஒற்றுமை என்று வலியுறுத்துகிற சூழலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழரசுக் கட்சியின் செயற்பாடு, எதிர்காலத்தில் மாற்று ஒரு கூட்டமைப்பை புதிதாக உருவாக்க வாய்ப்பாக அமையலாம். மக்களும் தமிழ்க் கட்சிகளின் தனித்தனியான தேர்தல் போட்டிகளை விரும்பவில்லை. வீட்டுச் சின்னம் தான் தமிழ் மக்களின் சின்னம் என்கிற நிலைப்பாடு தமிழ் மக்களின் மத்தியில் இருக்கிறது. பொறுத்திருந்து பார்ப்போம்.

# முன்னாள் அமைச்சர் ரெஜினோல்ட் குரே காலமானார்



முன்னாள் அமைச்சர் ரெஜினோல்ட் குரே தனது 74 ஆவது வயதில் காலமானார். முன்னாள் அமைச்சர் ரெஜினோல்ட் குரே, வட மாகாண முன்னாள் ஆளுநராகவும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. நேற்று (12) இரவு அவர் திடீர் சுகயீனமடைந்ததை அடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் காலமானார்.

பாராளுமன்ற உறுப்பினர், வெகுஜன ஊடக அமைச்சர், சிறு ஏற்றுமதி பயிர் ஊக்குவிப்பு அமைச்சர், விமான போக்குவரத்து அமைச்சர், நீதி பிரதி அமைச்சர், மேல் மாகாண முதலமைச்சர், வடமாகாண ஆளுநர், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையின் தலைவர் மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் (SLRC) தலைவர் என பல பதவிகளை அவர் வகித்துள்ளார்.

# T20 மற்றும் ஒருநாள் தொடரும் இந்திய அணி வசம் – தோல்வியடைந்த இலங்கை அணி



இந்தியா மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையிலான நேற்று (12) இடம்பெற்ற இரண்டாவது ஒரு நாள் போட்டியில் இந்திய அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றிப் பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

முதலில் துடுப்பாடிய இலங்கை அணி 39.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 215 ஓட்டங்களை பெற்றது. துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பில் அறிமுக வீரர் நுவனிந்து பெர்னாண்டோ 50 ஓட்டங்களை பெற்றார்.

இந்திய அணி சார்பில் பந்து வீச்சில் மொஹமட் சிராஜ் மற்றும் குல்தீப் யாதவ் தலா 3 விக்கெட்டுகளையும், உம்ரான் மாலிக் 2 விக்கெட்டுகளையும் பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 43.2 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 219 ஓட்டங்களை பெற்று போட்டியில் வெற்றி பெற்றுள்ளது. இதன்படி, 03 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரையும் இந்திய அணி கைப்பற்றியுள்ளது.

# தொழிலுக்காக அவுஸ்திரேலியா செல்ல இலங்கையர்களுக்கு சந்தர்ப்பம்

தொழில் ரீதியாக அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்துச் செல்ல இலங்கையர்களுக்கு சிறந்த சந்தர்ப்பம் உருவாகியுள்ளதாக விசேட குடிவரவு சட்டத்தரணி சுசந்த கடுகம்பல தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில், அவுஸ்திரேலியாவில் தற்போது திறமையான பணியாளர்களுக்கான தேவை காணப்படுகின்றது.

நாட்டில் திறமையான பணியாளர்களுக்கு பற்றாக்குறை இருப்பதை அவுஸ்திரேலிய அரசாங்கமும் எதிர்க்கட்சியும் ஒப்புக்கொண்டுள்ளதாக சட்டத்தரணி சுசந்த கடுகம்பல சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கையர்கள் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு அவுஸ்திரேலியாவிற்கு வேலை வாய்ப்புக்காக புலம்பெயர்ந்து செல்ல முடியும். திறமையான இடம்பெயர்வு, வணிக இடம்பெயர்வு, முதலாளியினால் வழங்கப்படும் விசாக்கள், குடும்பப் புலம்பெயர்தல் மற்றும் புகழ்பெற்ற அல்லது உலகளாவிய திறமையாளர் பிரிவுகளின் கீழ் இலங்கையர்களுக்கு அவுஸ்திரேலியாவிற்கு இடம்பெயர்வதற்கான வாய்ப்பு உள்ளது எனவும் அவர் தொடர்ந்தும் தெரிவித்துள்ளார்.



# சேது சமுத்திர திட்டம் : பேரவையில் தீர்மானம்

சேது சமுத்திர கால்வாய் திட்டத்தை மத்திய அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி தமிழக சட்டப்பேரவையில் வியாழக்கிழமை ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தை பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்தார்.

தீர்மான விவரம் : கடந்த 1860 ஆம் ஆண்டில் ரூ.50 லட்சம் செலவில் உருவாக்கப்பட்ட மகத்தான திட்டம்தான் சேது சமுத்திர கால்வாய் திட்டம். அதன்பிறகு 1955 இல் தமிழ்நாட்டின் சிறந்த நிபுணர் டொக்டர் ஏ.ராமசாமி முதலியார் குழு. 1963 இல் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டம். 1964 இல் அமைக்கப்பட்ட அரசு அதிகாரி நாகேந்திர சிங் தலைமையிலான உயர்நிலைக் குழு உள்ளிட்ட பல்வேறு பொறியியல் வல்லுநர்களால் பல ஆண்டு காலம் ஆராய்ந்து வடிவமைக்கப்பட்டது தான் சேது கால்வாய் திட்டமாகும். இதன் வழித்தடங்கள் ஆய்வு செய்யப்பட்டு. சுற்றுச்சூழல் பாதிக்கப்படாத வகையில் பணிகளை மேற்கொள்ள திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.

1998 ஆம் ஆண்டு தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியின்போது. திட்டத்துக்கான சாத்தியக்கூறு அறிக்கைக்கு அப்போதைய பிரதமர் வாஜ்பாய் அனுமதி அளித்தார். அப்போதுதான் சேது சமுத்திர திட்டத்தின் வழித்தடம் எது என்பதும் இறுதி செய்யப்பட்டது. பின்னர். மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசு பொறுப்பேற்றது. திமுக பங்கேற்றிருந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் பிரதமரான மன்மோகன் சிங். திட்டத்துக்குத் தேவையான நிதியை ஒதுக்கினார். 2004 ஆம் ஆண்டில் ரூ.2.427 கோடி மதிப்பீட்டில் திட்டத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டது. இதன்பின். 2005 ஆம் ஆண்டு ஜூலை 2 ஆம் திகதி திட்டம் தொடக்கி வைக்கப்பட்டது.

திட்டப் பணிகள் பாதியளவு முடிந்த நிலையில். அரசியல் காரணங்களுக்காக பாஜக சார்பில் திட்டத்துக்கு முட்டுக்கட்டை போடப்பட்டது. இந்தத் திட்டத்தை தொடக்கம் முதல் ஆதரித்து வந்த அதிமுக பொதுச் செயலாளர் (ஜெயலலிதா) தனது நிலைப்பாட்டை திடீரென மாற்றிக் கொண்டார். இந்தத் திட்டத்துக்கு எதிராக வழக்கும் தொடர்ந்தார். எந்தக் காரணத்தைக் கூறி முட்டுக்கட்டை போடப்பட்டதோ. அதையே நிராகரிக்கக்கூடிய வகையில். தற்போது ராமேசுவரம் கடல் பகுதியில் இருந்தது எந்த மாதிரி கட்டுமானம் என்பதைக் கூறுவது கடினம் என்று மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் கூறியிருக்கிறார்.

இப்படி மத்திய அரசு தெரிவித்துள்ள நிலையில். சேது கால்வாய் திட்டத்தை இனியும் நிறைவேற்றாமல் இருப்பது தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டை போடும் நிகழ்வாகவே இருக்கும். இதற்கு சட்டப்பேரவை தனது கவலையைத் தெரிவிக்கிறது. இனியும் திட்டத்தைச் செயல்படுத்தவிடாமல் சில சக்திகள் முயல்வது நாட்டின் வளர்ச்சிக்கு எதிரானது. எனவே. மேலும் தாமதமின்றி இந்த முக்கியமான சேது சமுத்திர திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு உடனடியாக முன்வர வேண்டும். திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு அனைத்து ஒத்துழைப்பையும் நல்கும் என்று தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று முதல்வர்மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்தார்.

குரல் வாக்கெடுப்பு: சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்மொழிந்த தீர்மானத்தின் மீது. வேல்முருகன் (தமிழக வாழ்வுரிமை). ஈ.ஆர்.ஈஸ்வரன் (கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி). எச்.எம்.ஜவாஹிருல்லா (மனித நேய மக்கள் கட்சி). சதன் திருமலைக்குமார் (மதிமுக). மாரிமுத்து (இந்திய கம்யூனிஸ்ட்). நாகை மாலி (மார்க்சிஸ்ட்). ஆளூர் ஷா நவாஸ் (விசிக). நயினார் நாகேந்திரன் (பாஜக). ஜி.கே. மணி (பாமக). கு.செல்வப்பெருந்தகை (காங்கிரஸ்). பொள்ளாச்சி வி.ஜெயராமன் (அதிமுக) ஆகியோர் பேசினர். அனைவரும் தீர்மானத்தை ஒருமனதாக ஆதரித்துப் பேசினர்.

இதைத் தொடர்ந்து. தீர்மானம் குரல் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. தீர்மானத்துக்கு பேரவையில் உள்ள அனைத்துக் கட்சிகளும் ஆதரவு தெரிவித்ததால். தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியதாக பேரவைத் தலைவர் மு.அப்பாவு அறிவித்தார்.

சேது சமுத்திர திட்டத்தால் மீனவர்களுக்கும் பயன் கிடைக்கும் என்றார் முதல்வர்ஸ்டாலின். சேது சமுத்திர திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசை வலியுறுத்தும் தீர்மானத்தை முன்மொழிந்து அவர் பேசியதாவது. தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும். இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியையும் வலுப்பெறச் செய்வதற்கு இன்றியமையாத திட்டமாக சேது சமுத்திர திட்டம் விளங்கி வருகிறது.

முன்னாள் முதல்வர் அண்ணாவின் கனவுத் திட்டமான சேது சமுத்திர திட்டத்தை நிறைவேற்ற முன்னாள் முதல்வர் கருணாநிதி பாடுபட்டார். பாக். நீரிணையையும். மன்னார் வளைகுடாவையும் இணைக்கும் ஆடம்ஸ் பாலத்தின் குறுக்கே வெட்டப்பட வேண்டிய கால்வாயின் பெயர்தான் சேது சமுத்திர திட்டம்.

முதல் பிரதமர் ஜவாஹர்லால் நேரு தலைமையில் கடந்த 1963 ஆம் ஆண்டு நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேது சமுத்திர திட்டம் இடம்பெற்றது. 1972 ஆம் ஆண்டு தூத்துக்குடி துறைமுக நுழைவு வாயிலில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.யின் சிலையைத் திறந்து வைக்க பிரதமர் இந்திரா காந்தி வந்தார். அப்போது. சேது சமுத்திர திட்டத்தை முன்னாள் முதல்வர் கருணாநிதி வலியுறுத்தினார்.

சேது சமுத்திர கால்வாய் திட்டம் நிறைவேற்றப்பட்டால் தமிழ்நாட்டில் தொழில் வணிகம் பெருகும். கப்பல்களின் பயண தொலைவு. நேரம் பெருமளவு குறையும். தமிழ்நாடு மற்றும் அண்டை மாநில துறைமுகங்களில் சரக்குகளைக் கையாளும் திறன் அதிகரிக்கும். சிறுசிறு துறைமுகங்களை உருவாக்க முடியும். சேது கால்வாய் திட்டத்தின் கீழ். மீன்பிடித் துறைமுகங்கள் மேம்படுத்தப்படுவதால். கடல்சார் பொருள் வர்த்தகம் பெருகி. அதன் காரணமாக மீனவர்களின் பொருளாதாரம். வாழ்க்கைத் தரம் உயரும் என்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின். (தினமணி)

# இலங்கையின் 10 வங்கிகள் குறித்து எடுக்கப்பட்டுள்ள தீர்மானம்




ஏஜென்சியின் இலங்கை தேசிய தரமதிப்பீட்டின் சமீபத்திய இறையாண்மைக் குறைப்பு மற்றும் மறுசீரமைப்பைத் தொடர்ந்து இலங்கையின் 10 வங்கிகளின் தேசிய நீண்ட கால மதிப்பீடுகளை ஃபிட்ச் ரேட்டிங்ஸ் நிறுவனம் தரமிறக்கியுள்ளது.

1 டிசம்பர் 2022 அன்று ஃபிட்ச் இலங்கையின் நீண்ட கால உள்ளூர் நாணய வழங்குனர் இயல்புநிலை மதிப்பீட்டை (IDR) ‘CC’ இலிருந்து ‘CCC’ க்கு தரமிறக்கியதைத் தொடர்ந்து. இலங்கை வழங்குநர்களிடையே ஒப்பீட்டு கடன் தகுதியில் மாற்றங்களை பிரதிபலிக்கும் வகையில் இந்த மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படுகிறது.

தேசிய அளவிலான மதிப்பீடுகள் என்பது உள்ளூர் முதலீட்டாளர்களுக்கு ஆபத்தை வேறுபடுத்த உதவும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட சந்தையில் வழங்குபவர்களின் இடர் தரவரிசை ஆகும். இலங்கையின் தேசிய அளவிலான மதிப்பீடுகள் ‘(lka)’ என்ற தனித்துவமான அடையாளங்காட்டியால் குறிக்கப்படுகின்றன.

# எல்லை நிர்ணய குழுவின் இறுதி அறிக்கை தாமதிக்கலாம் - மஹிந்த தேசப்பிரிய

எல்லை நிர்ணய குழுவின் இறுதி அறிக்கையை குறித்த திகதியில் அரசாங்கத்திடம் வழங்குவது சாத்தியமில்லை என குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள 8.911 உள்ளூராட்சி மன்றத் தொகுதிகள் 4.000 உள்ளூராட்சித் தொகுதிகளாகக் குறைக்கப்பட வேண்டும் என்று கொள்கைத் தீர்மானம் எடுத்ததன் பின்னர். மஹிந்த தேசப்பிரிய தலைமையில் எல்லை நிர்ணய குழு நியமிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் பெப்ரவரி 28 ஆம் திகதி எல்லை நிர்ணய பணிகளை நிறைவு செய்ய திட்டமிடப்பட்டிருந்த போதிலும் நடைமுறைச் சிக்கல்கள் பல காரணமாக அது தாமதமாகும் என குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

# 06 வது இடத்திற்கு முன்னேறிய விராட் ஹோலி

ஒருநாள் கிரிக்கெட்டில் தொடர்ச்சியாக இரு சதங்கள் அடித்த விராட் கோலி. ஒருநாள் தரவரிசையில் முன்னேற்றம் அடைந்துள்ளார்.

குவாஹாட்டியில் நடைபெற்ற இலங்கைக்கு எதிரான ஒருநாள் ஆட்டத்தில் 113 ஓட்டங்கள் எடுத்த விராட் கோலி. ஆட்ட நாயகனாகத் தேர்வானார்.
வருடக் கடைசியில் வங்கதேசத்துக்கு எதிரான ஒருநாள் ஆட்டத்தில் சதமடித்தார். இதற்கடுத்து விளையாடிய ஒருநாள் ஆட்டத்திலும் இலங்கைக்கு எதிராகச் சதமடித்தார்.

இந்நிலையில் ஐசிசி வெளியிட்டுள்ள ஒருநாள் தரவரிசையில் இரு இடங்கள் முன்னேறி 6 ஆம் இடத்தைப் பிடித்துள்ளார் கோலி. ரோஹித் சர்மா 8 ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

ஒருநாள் தரவரிசையில் பாகிஸ்தான் தலைவர் பாபர் ஆஸம் முதல் இடத்தைத் தக்கவைத்துக்கொண்டுள்ளார். அடுத்த 4 இடங்களில் வான் டர் டுசென். இமாம் உல் ஹக். குயிண்டன் டி காக். வார்னர் ஆகியோர் உள்ளார்கள். இந்தியாவின் ஷ்ரேயஸ் ஐயர் 15 வது இடத்தில் உள்ளார்.



## சவளக்கடை வீரத்திடல் அல் ஹிதாயா மகா வித்தியாலத்தின் முப்பெரு விழா

